செலவுகள் கடன் பெறுவது குறித்து நிதி நிறுவனத்திற்கு ஏற்பட்டாலும் நிதி நிறுவனத்தின் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு கடன் பெறுபவரே இவை அனைத்துக்கும் பொறுப்பாவார் மேலும் அவ்வாறு பாக்கித் தொகையை வசூக்க செய்யப்படும் செலவுகள் அனைத்தையும் கடன் பெறுபவரின் கணக்கிலேயே சேர்க்கப்படும். மேலும் அந்த அடமானச் சொத்தை பாதுகாக்க ஆகும் செலவையும் கடன் பெற்றவரே ஏற்கவேண்டும்.

14.b. Provided however, that where the Company has at the specific request of the Borrower/ s and the in its sole of discretion communicated in writing to the Borrower/s that in respect of any specific facility/limit, this charge by way of hypothecation/ mortgage will not operate, such facility/ limit shall be deemed as not having been secured by hypothecation/ mortgaged by the Borrower/s as stated herein above notwithstanding the incorporation such specific facility/ limit in the Schedules hereunder written.
நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிதி நிறுவனத்தின் கடன் பெறுபவரின் வேண்டுகோளுக்கிணங்க நிதி நிறுவனத்தின் விருப்பு உரிமையின் அடிப்படையில் அடைமானம் செய்யப்பட்ட பொருட்களின் மீது எவ்வித பற்றுரிமையும் இல்லையென தெரிவிக்கலாம் அவ்வாறு தெரிவிக்கும் சூழ்நிலையானது மேற்படி நிதி நிறுவனம் அந்த அடைமானம் பொருளின் மீது எவ்வித பற்றுரிமையும் கொண்டிராத நிலையில் ஏற்படக்கூடியது.

15. The borrowers declare that all the said assets (movable/ immovable ) hereunder secured are the absolute Property of the Borrower (s) at its sole disposal and free from any prior encumbrances, attachments, charges and that all further assets that may be secured shall like wise be unencumbered, absolute and disposable Property of the borrower (s). The borrower (s) further confirms that the said assets are not subject matter of any proceedings or attachments under the Income Tax Act 1961 or any Sales Tax laws or under any other like fiscal laws for the time being in force.
கடன் பெற்றவர் இதன் மூலம் விளம்புகை செய்வது என்னவென்றால் நிதி நிறுவனத்திற்கு அடமானம் செய்யப்பட்ட பொருட்கள்/சொத்துக்கள் (அசையும்/அசையா) அனைத்தும் அவருடைய சொந்த தனிப்பட்ட சொத்து என்றும் அதை மாற்றாக்கம் செய்ய அவருக்கு முழு உரிமை உள்ளது என்றும் அந்த சொத்தானது எந்தவித வில்லங்கத்திற்கோ பற்றுதலுக்கோ பற்றுரிமைக்கோ உட்பட்டதல்ல என்றும் உறுதி கூறுகிறார். மேலும் கடன் பெறுபவர் உறுதி அளிப்பதாவது மேற்படி அடைமானச் சொத்து வருமானவரிச் சட்டம் 1961 மற்றும் விற்பனை வரி அல்லது இதர வரியினங்களுக்கு உட்பட்டதல்ல என்றும் எவ்வித பற்றுதலுக்கும் அமுல் உள்ள சட்டத்தின் படி உட்படவில்லை என்று உறுதி கூறுகிறார்.

16.a) The Borrower shall not during the continuance of this Agreement sell, remove, dispose of , pledge, hypothecate or otherwise charge, encumber, or in any manner part with the possession of the Borrower do or permit to be done any act whereby the security hereinbefore expressly given to the Company shall in any way be prejudicially affected or whereby any distress or attachment or execution may be levied thereon by any creditor or other person including any government or municipal authority or body.
கடன் பெற்றவர் இந்த ஒப்பந்தம் அமுல் உள்ள நிலையில் நிதி நிறுவனத்திற்கு பிணையாக வழங்கியுள்ள சொத்தினை விற்கவோ, நகர்த்தவோ, நீக்கவோ, அடகு மற்றும் அடமானம், வில்லங்கம் செய்யவோ, தானோ வேறு எவரின் மூலமாகவோ அனுமதிப்பதில்லை என்றும் அவ்வாறு மேற்படி நிதி நிறுவனம் எந்த வகையிலும் தன்னால் பாதிக்கப்படாது என்றும். வேறு கடன் வழங்கியவர்களால் இந்த சொத்து எவ்வகையிலும் பற்றுகை உள்ளிட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்படாது என்று உறுதி கூறுகிறார் நகராட்சி மற்றும் உள்ளாட்சி உள்பட வேறு எந்த அமைப்பாலும் மேற்படி சொத்து பாதிக்கப்படாது என்றும் உறுதி கூறுகிறார்.

16 b) The Borrower shall notify the Company at once of any change in his present address given in schedule B.
அட்டவணை 'அ'-வில் குறிப்பிட்டுள்ள தனது முகவரி மாற்றப்பட்டால் அதை நிதி நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் உடனடியாக தெரிவிக்கவேண்டும்.

17 a) In default of the Borrower doing so, the Company may (but shall not be bound to) keep in good and proper repair, working order and condition and render marketable the hypothecated goods or effect or renew such insurance and pay all rates, taxes, assessments dues and outgoings payable by the Borrower. Any premium paid by the Company or any other amount paid by the Company hereunder and any costs, charges and expenses whatsoever incurred by the Company shall be repaid by the Borrower on demand forthwith. And until repayment with interest at the rate aforesaid, the same shall be a charge on the hypothecated goods. All sums received under such insurance shall be applied in or towards liquidation of the amount for the time being due hereunder to the company.

கடன் பெறுபவர் மேற்கண்டவாறு செய்யத் தவறினால் நிதி நிறுவனமே செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை அந்த பொருட்களையோ சொத்துக்களையோ நல்ல நிலையில் வைத்திருப்பதற்காகவும் அதை விற்பதற்குத் தகுதியான நிலையில் வைத்திருப்பதற்காகவும், காப்பீடு மற்றும் வரி மற்றும் இதர செலவினங்கள் கடன் பெறுபவரால் செய்யப்பட வேண்டியதாக இருக்கும் நிலையில் மேற்படி நிதி நிறுவனமே அதை செய்யும் மேற்படி செலவினங்களையும் காப்பீட்டுத் தொகைகளையும் மேற்படி நிதி நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்தால் அவை அனைத்தையும் கடன் பெறுபவர் உடனடியாக நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். மேற்படி வட்டி விகித முறையில் வட்டியானது திருப்பிச் செலுத்தப்படாத போது அது அடைமானம் செய்யப்பட்ட பொருட்களின் மீது பொருட்பிணை ஏற்படுத்தும் காப்பீட்டுத் தொகையின் மூலம் வரும் தொகை அனைத்தையும் நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பாக்கிக்காக தீர்க்கப்படுவதே முதல் உரிமையாக நிறுவனத்திற்கு உள்ளது.

b) In case the hypothecated assets come into possession of the company or of any receiver appointed by the company, the company shall not in any way be responsible for the quantity, quality, weight, value and final condition of the said assets and/ or for any loss, destruction or deterioration or damage occasioned by theft, pilferage, robbery, fire, riots, and civil commotion, malicious, damages, howsoever may arise including anya ct, negligence, omission, default of the officers of the company or its agents.

மேற்படி அடமானம் செய்யப்பட்ட பொருட்கள் நிதி நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதோ அல்லது அதனை நிர்வகிப்பவர் கட்டுப்பாட்டில் இருக்கும் போதோ ஏற்படும் தரக்குறைவு, எடைக்குறைவு, மதிப்பு குறைதல் அல்லது சிதைதல், பாதிப்படைதல், திருட்டு போதல், கலகத்தினால் சேதமடைதல், வேண்டுமென்றே விரோதத்தினால் சேதப்படுத்தல் ஆகியவற்றிற்கோ அல்லது நிறுவனத்தின் அல்லது அதன் அதிகாரம் பெற்றவர்களின், முகவர்களின் கவனக்குறைவாலோ, தவறுதலாலோ ஏற்படும் இழப்புகளுக்கு எந்தவிதத்திலும் மேற்படி நிதி நிறுவனம் எவ்வகையிலும் பொறுப்பாளி ஆகாது.

c) The Borrower under takes to indemnify and keep indemnified the company against every and any kind of loss or damage by reason of damage by reason of damage to destruction or loss of the hypothecated goods from any cause whatsoever or by reason of any claims by third parties.

மூன்றாம் நபரினால் நிதி நிறுவனத்திற்கு அடமானம் செய்யப்பட்ட பொருட்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டாலோ மதிப்பு குறைவு ஏற்பட்டாலோ அல்லது கோரிக்கை எழுந்தாலோ அதற்கு கடன் பெறுபவரே முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

d) The Borrower (s) shall at all times indemnify and keep indemnified the company from and against all suits, proceedings, costs, charges, claims and demands whatsoever that may at any time arise or be brought or made by any person against the company in respect of any acts, matters and things lawfully done or caused to be done in connection with the said assets.

மூன்றாம் நபராலோ அல்லது அடைமானம் செய்யப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக வழக்கு, நடவடிக்கை செலவு, பற்றுகை, கோரிக்கை, ஏதேனும் ஏற்பட்டாலோ அல்லது அதன் மூலம் மேற்படி நிதி நிறுவனத்திற்கு இழப்பு ஏதேனும் ஏற்பட்டாலோ அதற்கு கடன் பெறுபவரே முழு பொறுப்பாவார்.

18. The company shall be entitled to put up and the Borrower hereby gives his consent to the company to put up the company's name board on the hypothecated goods or at the place where the hypothecated goods are or may be stored, a the such time and in such manner as the company may deem proper.

மேற்படி நிதி நிறுவனமானது நிதி நிறுவனத்திற்கு அடமானம் செய்யப்பட்ட பொருட்களின் மீதோ, சொத்துகள் மீதோ, மேற்படி சொத்துக்கள் நிதி நிறுவனத்திற்கு அடைமானம் செய்யப்பட்டது என்கிற விவரத்துடன் பெயர் பலகை வைத்திட உரிமை பெற்றது. அதற்காக கடன் பெற்றவர் இதன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளார்.

19. The Borrower will at all times pay all rent, rates, taxes, assessments, dues, and outgoings payable in respect of hypothecated goods/ mortgaged Property and also in respect of any premises wherein the same may for the time being be installed or kept or be and will also keep the hypothecated goods in a marketable state and in good and substantial repair and condition and in thorough working order and will not make any alternations therein without the previous written consent of the company.

அடமானம் செய்யப்பட்ட சொத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து வாடகை வரிவிகிதங்கள் தீர்வை பாக்கிகள் செலுத்தப்பட வேண்டிய செலவுகள் மற்றும் அடமானம் செய்யப்பட்ட பொருட்கள், பொருட்களை பாதுகாத்தல், பராமரித்தல், பழுதுபார்த்தல் நல்ல நிலையில் வைத்ததிருத்தல் ஆகியவற்றிற்கு கடன் பெறுபவரே முழு பொறுப்பாவார் மேலும் அடைமானம் செய்யப்பட்ட பொருட்களில் ஏதாவது மாறுதல் செய்யப்பட வேண்டுமென்றால் அதை நிதி நிறுவனத்தின் எழுத்து மூலமாக ஒப்புதலுக்கு பின்னர் தான் செய்யவேண்டும்.

20. The Borrower shall at his own expense insure using a General Insurer acceptable to the Company, and keep insured the hypothecated goods/ mortgaged Property and also the premises where in the same are installed or lying against fire and all such other risks as the company shall from time to time require for the full market value thereof in one or more insurance offices approved by the Company and shall deliver to the company the polices of insurance duly assigned to the company and shall maintain such insurance throughout the continuance of the security and deliver to the company renewal receipts there for.

கடன் பெற்றவர் தன் சொந்த செலவில் அடமானம் செய்யப்பட்ட பொருட்களுக்கு/சொத்துக்களுக்கு பொதுகாப்பீடு செய்ய வேண்டும். மேலும் அது அந்த இடம் மற்றும் பொருள் ஆகியவற்றிற்கு ஏற்படும் சேதங்களுக்கும், தீயினால் ஏற்படும் சேதங்களுக்கும், பொருட்களின்/சொத்துக்களின் முழு சந்தை மதிப்பிற்கு செய்யப்பட வேண்டும். அத்தகைய காப்பீடு பத்திரங்களை கடன் பெற்றவர் உடனடியாக நிதி நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் மேலும் கடன் பெற்றவர் காப்பீடு பத்திரத்தை அவ்வப்போது புதுப்பித்து வைத்திருக்க வேண்டும்.

21. The Borrower shall at his own expense get the Lives of the Borrower and Coborrower insured as may be required by the company. Besides the Life risk, Insurance should cover the risk of Permanent or Partial Disability and any other covered as specified by the company, and shall deliver to the company the policies of insurance duly assigned to the company and shall maintain such insurance through the continuance of the security and deliver to the company the renewal receipts there for.

கடன் பெறுபவர் தன்னுடைய சொந்த செலவில் அவருக்கு கூட்டாக கடன் பெறுபவருக்கும் ஆயுள் காப்பீடு செய்திருக்க வேண்டும். அது பகுதி தகுதி இழப்பு, முழுவதும் தகுதி இழப்பு, இயலாமை ஏற்படுவதற்கு உட்படவும் அந்த ஆயுள் காப்பீட்டுப் பத்திரம் இருக்க வேண்டும். அந்த ஆயுள் காப்பீட்டுப் பத்திரங்களையும் புதுப்பித்தல் பத்திரங்களையும் கடன் பெற்றவர் நிதி நிறுவனத்திற்கு உடனடியாக சமர்பிக்க வேண்டும்.

22. a. The Borrower (s) irrevocably constitutes and appoints the company to be its Attorney to do and execute for and in the name and on behalf of the Borrower (s) all or any of the acts, deeds and things t hat is to say to take over and carry on the business, to sign, register, file any applications, forms, contracts, agreements, transfers, acceptances receipts, and any other documents and to demand, receive, sign and endorse all negotiable instruments, debts, dividends, mandates or other orders for payment of money by whatever nature or delivery, or Property, to transfer or realize or deal with any goods, machinery and other movables or of immovables, to appoint selling agents, to sell the shares, debenture, stocks etc, of any company in which the Borrower (s) holds stocks, etc., to attend and represent before any authority or tribunal and for the purpose to sign, execute and deliver all such documents and make all such declarations as may be necessary generally to act in the premises as fully and effectually with all intents and purpse and to do all things as are necessary and which the Borrower(s) himself would do if personally present for all and any of the purposes aforesaid to appoint a substitute or substitutes.

கடன் பெறுபவர் மேற்படி நிதி நிறுவனத்திற்கு ஒரு ரத்து செய்ய முடியாத பொது அதிகார ஆவணத்தினை இதன் மூலம் கொடுக்கிறார். மேற்படி நிதி நிறுவனம் கடன் பெறுபவரின் வியாபாரத்தை தன்வசம் எடுத்துக் கொள்வதற்கும், அவர் சார்பில் விண்ணப்பங்கள் படிவங்கள், ஒப்பந்தங்கள், மாறுதல்கள், ஏற்றுக்கொள்ளுதல், ஒப்புகை அளித்தல் அதுமட்டுமல்லது அவர் சார்பில் ஆவணங்கள் வரவேண்டியவைகள் ஆகியவற்றிற்காக, கையொப்பமிடுவதற்கும், கடன் பத்திரங்கள் மாற்று முறை ஆவணங்கள் வரவேண்டிய தொகைகளை பெறவும் மற்றும் பணம் செலுத்துவதற்கான உத்தரவு அளிக்கவும், மேலும் அடைமானச் சொத்துக்களை/ பொருட்களை விற்கவும் அவற்றை விற்க முகவர்களை நியமனம் செய்யுவும், கடன் பெறுபவர் சார்பில் நீதிமன்றத்தில் / நடுவர்மன்றத்தில் ஆஜராகவும், கையொப்பமிடவும் மேலும் சரியென கருதும் பிற நடவடிக்கைகளை கடன் பெற்றவர் நேரில் செய்தார்ப்போல செய்திடவும் அதற்கென ஆட்களை நியமிக்கவும் பதிலீடு செய்யவும் முழு அதிகாரங்களையும் அளிக்கிறார்.

22.b. The Borrower (s) hereby ratifies and confirms all the acts, things, deeds performed to be performed by the company or its nominee or its substitutes in pursuance of any of the aforesaid powers and the powers hereby conferred shall not be determined or affected by the fact of the Borrower (s) acting personally or through another in the premises.

கடன் பெறுபவர் மேற்கண்ட பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ள செயல்களை செய்வற்கு மேற்படி நிதி நிறுவனத்திற்கு அல்லது அவருடைய அதிகாரம் அளிக்கப்பட்ட நபருக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் இதன் மூலம் உறுதி செய்து கொள்கிறார் அவ்வாறு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள செயலானது கடன் பெறுபவரின் வேறு எந்த நடவடிக்கையாலும் பாதிக்கப்படாது.

22.c. The aforesaid powers which may exercised by the company in its sole discretion but not obliged to do so shall subsist in favour of the company till all the dues are paid by the Borrower (s).

மேற்படி நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்துவது நிதி நிறுவனத்தின் விருப்புரிமைக்கு உட்பட்டது. அவ்வாறு செயல்பட நிதி நிறுவனத்திற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை. மேலும் கடன் பாக்கி முழுவதும் கடன் பெறுபவரால் நிதி நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்தப்படும் வரை அந்த அதிகாரம் தொடர்ந்து இருக்கும்.

23.a. The Borrower shall, whenever required by the company, give full particulars to the company of financial condition and business of the Borrower, all the assets of the Borrower and of the hypothecated goods and of all records and books of accounts and vouchers of the Borrower in reference thereto and give and execute any necessary documents required to give effect to this security.

மேற்படி நிதி நிறுவனம் எப்போது கேட்டாலும் கடன் பெறுபவர் அவரின் நிதி நிலை குறித்த, வியாபாரம் குறித்த, சொத்தின் நிலை குறித்த, பொருட்களை பாதுகாக்கும் கணக்கு பதிவேடு ரசீதுகள் மற்றும் பிணைச் சொத்துகளுக்கு உண்டான ஆவணங்கள் அனைத்தையும் கடன் பெற்றவர் நிதி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

23.b. The Borrower hereby irrevocably empowers the company and any person or persons from time to time authorized by the company on its behalf and without previous notice others the Borrower to enter the said premises or any other premises what so ever for the purpose of inspection or valuation or for taking possession of the hypothecation goods. All costs, charges and expenses incurred by the company and incidental to such inspection and valuation shall be paid to the company, forthwith on demand ( the company's statement being conclusive) and until payment shall with interest at the rate of aforesaid be changed upon the hypothecated goods. Any such valuation shall be conclusive and binding on the Borrower both in and out of Court.

கடன் பெறுபவர் இதன் மூலம் ரத்து செய்யப்பட முடியாத ஒரு அதிகாரத்தை நிதி நிறுவனத்திற்கு வழங்குகிறார். அதன் மூலம் நிதி நிறுவனமோ அல்லது அதன் ஆட்களோ அல்லது அதிகாரம் பெற்ற ஆட்களோ கடன் பெற்றவருக்கு எவ்வித தகவல்களும் தெரிவிக்காமலேயே அடமானம் செய்யப்பட்டுள்ள சொத்தில் பிரவேசித்து அதை ஆய்வு செய்யவும், மதிப்பீடு செய்யவும், சுவாதீனம் செய்து கொள்ளவும் செய்யலாம். மேலும் அதற்கான செலவுகள் அனைத்தையும் கடன் பெறுபவரே ஏற்றுக் கொள்ளவேண்டும் அது நீதிமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் முடிவானது ஒன்றாகும்.

24. The Borrower shall at all times during the continuance of this security keep and maintain such margin of security in favour of the company (hereinafter called " The said margin") as may be required by the company from time to time. If and so often as the said margin shall fail to be maintained, and then the Borrower shall forth with (according as the company may require) either hypothecate to the company further goods or tangible movable Property approved by the Company and of sufficient value to make up the deficiency or shall reduce the amount for the time being due to the company by a cash payment so as to maintain the said margin.

கடன் பெறுபவர் இந்த கடன் வசதிக்கான பிணை இருக்கும் நிலையில் அதை பாதுகாத்தல் பராமரித்தல் (மேற்குறிப்பிட்ட எஞ்சியது) என்று இதன் பின்னால் குறிப்பிடப்படும் மேற்படி எஞ்சிய விடுமிகு தொகையானது இல்லாத போது மேற்படி நிதி நிறுவனம் கேட்கும் பொழுது கூடுதல் பிணைபொருட்களை நிதி நிறுவனத்திற்கு வழங்க வேண்டும்.

25.The Borrower agrees to accept as conclusive proof of the correctness of any sum claimed to be due from him to the company under this agreement a statement of account made out from the books of the company and signed by Manager/ Accountant and/ or other duly authorized office of the company without the production of any other voucher, document or paper.

நிதி நிறுவனத்தின் மேலாளர் அல்லது காசாளர் அல்லது வேறு அதிகாரம் பெற்ற நபர்களால் வழங்கப்படும் கடன் கணக்கு பட்டியலை சரி என ஏற்றுக்கொள்கிறார் வேறு எந்த ரசீதுகளையும், ஆவணங்களையும் கடன் பெறுபவர் கோருவதில்லை என்றும் உறுதி கூறுகிறார். அவ்வாறு நிதி நிறுவனத்தால் வழங்கப்படும் கணக்கு பட்டியலையே முடிவான ஆதாரமாக கடன் பெறுபவர் ஏற்றுக்கொள்கிறார்.

26. The Borrower shall inform the company promptly of any notice or intimation received from any Government, Semi-government Revenue, Municipal or local or other authorities regarding any default, delay etc., by the borrower in payment of any dues or in the performance of the Borrower's obligations towards them.
கடன் பெறுபவர் எவ்வித அறிவிப்பானது அது மத்தய அரசிடமிருந்தோ மாநில அரசிடமிருந்தோ அல்லது அரசு உதவிபெறும் அமைப்பிடமிருந்தோ அல்லது வருவாய், நகராட்சி, உள்ளாட்சி அமைப்பிடமிருந்து வந்தாலும் உடனடியாக நிதி நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். அந்த கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய அல்லது ஆற்றவேண்டிய கடமைகள் குறித்து இருக்கும்.

27. The Borrower (s)agrees and gives consent without any demur or protestation that
இந்த கடன் பெறுபவர் எந்தவித தயக்கமின்றி, எதிர்ப்புமின்றி, தாமதமின்றி தனது ஒப்புதலை பின்வருமாறு வழங்குகிறார்.

A. The company has the right to share the details of the Loan application and the said facility with any one or more credit Information Bureaus operating in India or with other credit granters, with their normal data privacy safeguards.
நிதி நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் அளித்த கடன் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை வேறுயாருக்குமோ அல்லது சி.பி.ஐ. அல்லது வேறு கடன் வழங்கும் நிறுவனத்திற்கோ கணக்கு வழக்குகளை பராமரிக்கும் பொருட்டு தெரிவிக்க உரிமை படைத்தது.

B. In the event of default in repayment of any monies or in the performance of breach of any terms or obligations, the company or any other agency authorized by the company will have an absolute discretion or unqualified right, power and authority to disclose or publish in public domain names of the Borrower (s) and or its directions/ partners/ officers bearers/ constitutes / members as DEFAULTER in such manner as they think fit.
மேற்படி நிதி நிறுவனத்தின் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை மீறி கடன் பெறுபவர் செயல்படும் நிலையில் மேற்படி நிதி நிறுவனம் அது குறித்த தகவல்களை விளம்பரம் செய்யவோ, பொது அறிவிப்பில் தெரிவிக்கவோ, அல்லது கடன் பெறுபவரின் நிறுவனமோ/கூட்டாளியோ அல்லது அலுவலக பணியாளரோ அல்லது உறுப்பினர்களோ யாராக இருந்தாலும் அவரது பெயரையும் கடனை திருப்பிச் செலுத்த தவறியவர் என்ற முறையில் மேற்கண்டவாறு வெளியிடப்படும். இது நிதி நிறுவனத்தின் முடிவிற்கு உட்பட்டது.

c) The company has the right to share data on customer profile and financial use data with any other entity, for consideration or otherwise, for developing or marketing products, for research and/ or developing market entry strategies, analytics and planning.
நிதி நிறுவனமானது கடன் பெற்றவரின் கடன் நிலை குறித்த தகவலையும் அவருடைய நிதி நிலை குறித்த தகவலையும் வேறு அமைப்பிடம் பகிர்ந்துகொள்ள உரிமையுடையது. இது மேற்படி நிதி நிறுவனத்தின் வளர்ச்சி, உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் வியாபார பகுப்பாய்வு, திட்டங்களுக்கும் உட்பட்டது.

28. The Borrower(s) agrees that it shall not induct any person/s who is a director on the Board of a company which is/ has been identified as a willful defaulter and that in case such a person is found to be on the Board or a Partner of the Borrower(s) it would at once take expeditious and effective steps for removal of such person/ from its Board.
கடன் பெறுபவர் இதன் மூலம் ஒப்பந்தம் செய்துகொள்வது என்னவென்றால் தனது நிறுவனத்தில் பங்குதாரராகவோ, நிர்வாகியாகவோ, கூட்டாளியாகவோ, கடனை திருப்பிச் செலுத்தத் தவறியவரை சேர்க்கமாட்டேன் என்றும் அவ்வாறு ஏதேனும் ஒரு நபர் இருந்தால் அவரை உடனடியாக பங்குதாரர், நிர்வாகி, கூட்டாளி என்ற நிலையில் இருந்து உடனடியாக நீக்கவேண்டும்.

29. The Borrower(s) agrees that the terms and conditions contained herein and/ or the security created on the said assets/ properties shall ensure, extend subsist and be valid and enforceable for the entire aggregate limit as also for all interest, costs, charges, expenses and other monies, indebtedness and liabilities which may from time to time become due and remain unpaid to the company including any of the new facilities within the aggregate facility limit, not with standing anything contained to the contrary in any of the relative documents or the granting of increased or totally new facilities or fresh accounts being opened in respect of existing or revised facilities or accounts becoming nil or coming into credit or inter change ability or cancellation of certain facilities within the aggregate limit granted or agreed to be granted or continued by the company to the Borrower (s) under these presents.

மேற்படி கடன் பெற்றவர் மேற்படி நிதி நிறுவனத்தின் விதிகளுக்கு கட்டுப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால் மேற்படி பிணையம் வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் அதன் தரம் மற்றும் அதை மாற்றாக்கம் செய்யக்கூடிய நிலை மற்றும் கூடும் வட்டி கட்டணங்கள், செலவுகள் மற்றும் பொருப்படைப்புகள் நிதி நிறுவனத்திற்கு வரவேண்டியவைகள், மேலும் புதிய கடன் வசதிகள் வழங்கப்பட்டாலும் அல்லது கூடுதலாக வழங்கப்பட்டாலும் மறு ஆய்வு செய்யப்பட்டாலும் அது குறித்த அனைத்து பணிகளையும் கடன் வழங்கியுள்ள தொகைகேற்ப செய்துக்கொள்ளும் உரிமை நிதி நிறுவனத்திற்கு உள்ளது. அதை கடன் பெறுபவரும் ஒப்புக்கொள்கிறார்.

30. The company shall be entitled to adjust, appropriate or set- off or exercise lien of or on all monies, securities, goods instruments held to the credit or for the benefit of the Borrower (s) on any account or coming into the control or possession of the company in any of its branches whether for any specified purpose or otherwise, with or without any particular mandate and whether singly or jointly towards the discharge and satisfaction of the liability of the Borrower(s).

கடன் பெறுபவரின் நிதி நிலைக்கு ஏற்பவும் பொறுப்பிற்கு ஏற்றவாறும் தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பினை பெற்றுள்ளவாறு மேற்படி கடன் பெறுபவரின் கணக்கிற்கு வரவேண்டிய அனைத்து தொகைகளையும், பிணையங்களையும், பொருட்களையும் மாற்று முறை ஆவணங்களையும், வரவேண்டியவைகளையும் சரிசெய்துக்கொள்ளும் உரிமை நிதி நிறுவனத்திற்கு முழுமையாக உள்ளது.

31. The Borrower hereby agrees that the company may hold the hypothecated goods/ mortgaged properties and the proceeds thereof not only as a security for the said loan but also as collateral security for any other moneys now due or which may at any time be due from the Borrower to the company whether singly or jointly with another or others and that in addition to any general lien or similar right to which the company may be entitled by the company may at any time and without notice to the Borrower combine or consolidate all or any of the Borrower's Account and set off or transfer any sum or sums standing to the credit of any one more of such account in or towards the satisfaction of any of the liabilities of the Borrower to the company on any other account or in any other respect whether such liabilities be actual or contingent,. Primary or collateral and several or joint.

மேற்படி கடன் பெறுபவர் நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துக்கொள்வது என்னவென்றால் கடன் பெறுபவர் நிதி நிறுவனத்திற்கு அடமானம் செய்துள்ள பொருட்களை/சொத்துக்களை நிதி நிறுவனமோ தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முழு அதிகாரம் வழங்குகிறார். அது முதல் பிணையமாகவோ அல்லது கூடுதல் பிணையமாகவோ அல்லது கடன் பெறுபவர் செலுத்தவேண்டிய பாக்கி தொகைக்காகவோ இருக்கலாம். மேற்படி பொறுப்பானது கூட்டாகவே அல்லது தனியாகவோ அல்லது பற்றுரிமையாகவோ இருக்கலாம், மேற்படி நிதி நிறுவனம் அதை சேர்க்கவோ ஒருங்கிணைக்கவோ அல்லது கடன் பெறுபவர் கணக்கில் இணைக்கவோ அல்லது பிணைச் சொத்தை விற்க்கவோ அந்த தொகையினை கடன் பெறுபவரின் கணக்கில் சேர்க்கவோ அல்லது வேறு கணக்குகள் ஏதாவது இருந்தால் கடன் பெறுபவரின் கணக்கிற்கு கொண்டுவரவோ செய்யலாம். அந்த பொறுப்புகள் நிலையானதாகவும் அல்லது எதிர்காலத்தில் வரவேண்டியதாகவும் இருக்கலாம் மேலும் அது முதற்பிணையாகவும் கூட்டுபிணையாகவும் அல்லது தனித்தனியாகவும் அல்லது கூட்டாகவும் இருக்கலாம்.

32. The Borrower (s) shall be liable to the company not with standing any change in the legal status or constitution of the Borrower (s) whether by way of amalgamation, merger, takeover, dissolution, winding up, insolvency nationalization or otherwise howsoever either by operation of law or by act of the parties but's shall remain in full force and be valid and enforceable against the Borrower (s) including the entities who shall come into existence upon such change or constitution as if they were the parties to these presents since its inception till full discharge of all the obligations or payments to the company.

கடன் பெறுபவர் தன்னுடைய சட்டப்படியான நிலையில் இருந்து நிதி நிறுவனத்திற்கு கட்டுப்பட்டவர். நிதி நிறுவனத்தின் இணைப்பு, கலைப்பு, நொடிப்பு நிலை அல்லது வேறு நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் கடன் பெற்றவரின் கடனை திருப்பிச் செலுத்தக்கூடிய கடனானது தொடர்ந்து அமுல் இருக்கும். கடன் பெற்றவரின் பொறுப்பானது எவ்வகையிலும் மாறாது.

33. If the Borrower(s) be more than one individual or entity, each one or any of them is hereby authorized by the others of them to admit and acknowledge their liability to the company by any payment into the account or by way of writing or in any manner otherwise and any such acknowledgement of liability or part payment by any one or more of them shall In addition to his/ their personal capacity be deemed to have been made on behalf of each or any of them for the purposes of sections 18 and 19 of the Limitation Act, 1963.
கடன் பெற்றவர் ஒன்றுக்கு மேற்பட்டவராகவோ அல்லது வேறு அமைப்பாகவோ இருக்கும் நிலையில் அவர்கள் ஒவ்வொருவரும் நிறுவனத்திற்கு கடன் பாக்கியை திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்கிறார்கள், அவர்களின் எவர் ஒருவரேனும் ஒப்புக்கொண்டாலும் கால வரையறைச் சட்டம் 1963 பிரிவு 18 மற்றும் 19-க்கு உட்பட்டு கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை ஒப்புக்கொண்டதாகவே கருதப்படும்.

34. Nothing herein contained shall prejudice any rights or remedies of the Company in respect of any other present or future security, guarantee, obligation or decree for any indebtedness or liability of the Borrower (s) to the company.
நிதி நிறுவனத்தின் உரிமைகள் மற்றும் நிவாரணம் பெரும் வகைகள் வேறு வகையில் குறிப்பிட்டிருந்தாலன்றி மேற்படி நிதி நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் அளித்துள்ள பிணை, பிணை உறுதி, கட்டுப்பாடு மற்றும் கடன் பெற்றுள்ள நிலை ஆகியவை எவ்வகையிலும் நிதி நிறுவனத்தின் உரிமையை பாதிக்காது.

35. The Borrower confirms that he has not borrowed any moneys from any other company or Co- Operative Society or from any other source whatsoever and whom so ever except as declared in the Loan Application proposal and further that so long as the Borrower continues to be indebted or liable to the company in the said Loan Account or in any other Account or manner the Borrower shall not without the previous written consent of the company borrow any moneys from any other company or Co- Operative Society or financier or from any other source.
கடன் பெற்றவர் இதன் மூலம் உறுதி கூறுவது என்னவென்றால் அவர் வேறு எந்த நிதி நிறுவனத்திலும், கூட்டுறவு சங்கத்திலும், வேறு எந்த வகையிலும் கடன் பெறவில்லையென்று உறுதி கூறுகிறார். மேற்படி நிதி நிறுவனத்தை தவிர கடன் விண்ணப்பத்தில் குறிப்பிட்டவாறு நிதி நிறுவனத்திற்கு மட்டுமே பாக்கித் தொகையை செலுத்த கடமைபட்டவர் அதில் மட்டுமே கடன் பெற்றுள்ளார். மேற்படி நிதி நிறுவனத்தின் எழுத்து மூலமான முன் அனுமதி பெறாமல் வேறு எந்த நிதி நிறுவனத்திலோ, தனியாரிடமோ வேறு எந்த வகையிலும் கடன் பெறக்கூடாது.

36. The company shall arrange the life insurance Policy for the borrower which shall be assigned to the company but the same shall not absolve the borrower/co- borrower or their legal heirs from paying the out standing debts in case of the death of the insured.
மேற்படி நிதி நிறுவனம் கடன் பெற்றவர் பெயரில் ஆயுள் காப்பீடு செய்ய ஏற்பாடு செய்யும் அந்த ஆயுள் காப்பீடு பத்திரம் மேற்படி நிதி நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படும். அது கடன் பெற்றவர் இறந்து விடும் நிலை ஏற்பட்டால் கடன் பெறுபவரின் மற்றும் அவர் வாரிசுகளின் கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பிருந்து எவ்வகையிலும் விடுவிக்காது.

37. The Borrower(s) hereby gives free and unambiguous consent for the said facilities granted or agreed to be granted or continued as stated herein above by the company to the Borrower /s being recovered as a public demand/monies in terms of any Legislation relating to recoveries thereof, where such consent is necessary under such legislation.
கடன் பெறுபவர் பெற்ற கடன் அல்லது பெறக்கூடிய மற்றும் பாக்கியை திரும்பி வசூல் செய்ய சட்டப்படி ஏதேனும் அனுமதி பெற வேண்டுமென்றால் அதனை கடன் பெறுபவர் இதன் மூலம் முழுமையாக வழங்குவார்.

38. All Taxes, fees and charges under law on fees, charges, installments, interest or any other amount payable by Borrower to the Company, shall be recovered from the Borrower, at rates prescribed from time to time.
கால நேரத்திற்கு ஏற்றவாறு நிதி நிறுவனமானது கடன் பெற்றவரால் செலுத்தப்பட வேண்டிய அனைத்துக் கட்டணங்கள், செலவுகள், தவணைகள், வட்டி ஆகியவற்றை வசூல் செய்ய உரிமையுடையது.

39. Any demand or notice to be made or given to the Borrower(s) hereto may be made or given by Fascimile (Fax), Courier or by leaving the same at or by registered post acknowledgment in an envelope addressed to the Borrower (s) at the address mentioned in Schedule B and any/ every such demand or notice shall be deemed to have been received as the case may be at which it was left or at which it would have been delivered in the ordinary course of post at the above address.
கடன் பெற்றவருக்கு கடனை திருப்பிச் செலுத்த வேண்டி ஏதேனும் அறிவிப்பு அல்லது தபால் மூலமாக அறிவிப்பு அல்லது பேக்ஸ் தனியார் அஞ்சல், மூலமாக கடன் பெற்றவர் அட்டவணை 'ஆ'-வில் வழங்கியுள்ளவாறு அவருடைய முகவரிக்கு அனுப்பப்படும் நிலையில் அவர் பெற்றுக் கொண்டாலோ அல்லது வேறு எங்காவது சென்றுவிட்டிருந்தாலோ, அவர் அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டதாகவே சட்டப்படி கருதப்படும்.

40. It is hereby expressly agreed that the company shall be at liberty to assign the debt and the benefit of these presents and the security for the advance and the security documents to the Industrial Development Company of India/ Small Industries Development company of India/ National company for Agricultural and Rural Development or any other Refinancing Entity (hereinafter referred to as the "Refinancing Agency)" as security for any refinance obtained by the company from said Refinancing Agency in respect of the loan agreed to be advanced by the company to the Borrower and the Borrower shall if and whenever required by the company to do so, at the Borrower's own expenses do and execute and join in doing and executing all such acts, things, deeds, documents, or assurances as the company may require, for the effectuation of such assignment.
மேற்படி நிதி நிறுவனம் தன்னுடைய விருப்புரிமையின் படி மேற்படி கடன் பெறுபவர் பெற்ற கடனை மற்றும் அதன் ஆவணங்களை ஐ.சி.டி.ஐ. / எஸ்.ஐ.சி.டி.ஐ. / என்.ஏ.ஆர்.டி. அல்லது (மறு கடன் வழங்கும் நிறுவனம்) ஆகியவற்றிற்கு பிணையாக கொடுக்க முழு உரிமையுள்ளது. அது நிதி நிறுவனத்தால் மேற்படி நிறுவனங்களில் பெறப்பட்ட மறுகடனுக்காகவும் இருக்கலாம். மேற்படி நிதி நிறுவனம் கோரும் போது அதற்கான அனைத்து ஆவணங்கள், உறுதி பத்திரங்கள், செயல்கள் ஆகியவற்றை செய்ய கடன் பெறுபவர் முழுமையாக இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்.

41. Nothing herein contained shall be deemed to limit or affect prejudicially the rights and powers of the company under any law or under any other documents executed or to be executed by the borrower in favour of the company.
இந்த ஒப்புதல் வேறு வகையில் குறிப்பிட்டிருந்தாலன்றி மேற்படி நிதி நிறுவனத்தின் உரிமையை கட்டுப்படுத்தவோ அல்லது பாதிக்கவோ எவ்வித சட்டமும் பொருந்தாது.

42. In case of any part of this Loan Agreement is struck down or deemed null and void by any law or regulation for the time being in force, then rest of the Agreement shall survive and shall remain executable.
சட்டப்படி இந்த கடன் ஒப்பந்த எந்த வாசகமாவது செல்லாது என்று அறிவிக்கப்பட்டால் இதில் குறிப்பிட்டுள்ள மற்ற வாசகங்கள் தொடர்ந்து அமுல் இருக்கும்.

43. Any dispute or differences arising under this Agreement shall be referred to the Arbitration of a sole Arbitrator at Bangalore, to be appointed in accordance with the provision of the Arbitration and Conciliation Act, 1996. The award of the arbitrator shall be final and binding on the parties .
இந்த கடன் ஒப்பந்தம் குறித்து ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அது இசைவுத் தீர்ப்பாளர், பெங்களூர் அவர்களின் முடிவிற்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும். அது இசைவுதி தீர்வு மற்றும் சமரச சட்டம் 1996-ன் படி இருக்க வேண்டும். அந்த இசைவுத் தீர்ப்பாளரின் முடிவே இறுதியானது. அது இரண்டு தரப்பினர்களை கட்டுப்படுத்தும்.

44. This agreement shall be governed by and construed in accordance with the Laws of India and competent courts at Bangalore shall have exclusive jurisdiction over this Agreement or any matters arising out of it.
இந்த ஒப்பந்தமானது இந்திய சட்டங்களின் படி பெங்களூரில் உள்ள தகுதி வாய்ந்த நீதி மன்றங்களின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும்.

45. The Borrower acknowledges that the Borrower has been furnished with a copy of this agreement and all other documents in relation to this Agreement.
மேற்படி கடன் பெற்றவர் இந்த ஒப்பந்த நகலை பெற்றுக் கொண்டதாக இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்.

Borrower / கடன் பெறுபவர்

1. ..............................................................................

2 ..............................................................................

3. ..............................................................................

4. ..............................................................................

This agreement shall come in force from the date of signing of this agreement and shall remain in force and effected until all the monies due and payable to company under this agreement between the Borrower and company are fully paid to the satisfaction of the company.
இந்த ஒப்பந்தமானது கடன் வழங்குபவராலும், கடன் பெறுபவராலும் நிதி நிறுவனத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் நிறைவு செய்தபின் கையொப்பமிட்ட பின் அமுலுக்கு வரும். இந்த ஒப்பந்தமானது நிதி நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் பாக்கி மற்றும் அனைத்து தொகைகளை திருப்பிச் செலுத்தும் வரை நிதி நிறுவனம் அதில் திருப்தியடையும் வரை அமுல் இருக்கும்.

In witness whereof, the Borrower has executed this agreement the day and year first above written.
கீழே கண்ட சாட்சிகளின் முன்னிலையில் கடன் பெற்றவர் மேலே குறிப்பிட்ட தேதியில் இந்த ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார்.

For **Aye Finance (P) Ltd**
அய் நிதி நிறுவனம் (பி) மிடெட் காக

Authorised Signatory /அதிகாரம் அளிக்கப்பட்ட கையொப்பம் செய்பவர்

**For the Borrower (s) / கடன் பெறுபவர்களுக்காக**

| | |
|---|---|
| Borrower - 1<br>கடன் பெறுபவர் - 1<br><br>Name / பெயர் | Borrower - 2<br>கடன் பெறுபவர் - 2<br><br>Name / பெயர் |
| Borrower - 3<br>கடன் பெறுபவர் - 3<br><br>Name / பெயர் | Borrower - 4<br>கடன் பெறுபவர் - 4<br><br>Name / பெயர் |

**Witness (s) / சாட்சி (கள்)**

| | Witness-1/சாட்சிகள் - 1 | Witness-2/சாட்சிகள் - 2 |
|---|---|---|
| Mr. / Mrs. / Ms.<br>திரு / திருமதி / செல்வி | | |
| Address / முகவரி | | |
| Signature / கையொப்பம் | | |

**Date / தேதி**

**Place / இடம்**

**Note:** Borrower's Loan application to be annexed
**குறிப்பு : கடன் பெறுபவரின் கடன் விண்ணப்பம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.**

**In case of any discrepancy or dispute, English version will be treated as authentic.**
ஏதேனும் குறைபாடு அல்லது பிரச்சனை ஏற்பட்டால் இதிலுள்ள ஆங்கில மொழி வாசகங்கள் சரியெனக்கொள்ளப்படும்.